

பல்லாவரம் சட்டமன்றத் தொகுதி பொழிச்சலூர் ஊராட்சியில் முத்தமிழ் அறிஞர் கலைஞர் அவர்களின் பிறந்த நாள் விழாவை முன்னிட்டு ஒன்றிய இளைஞரணி துணை அமைப்பாளர் ஊராட்சி மன்ற உறுப்பினர் எம்.கார்த்திக் ஏற்பாட்டில் ஒன்றிய செயலாளர் ஜி.கே.ரவி தலைமையில் கிரிக்கெட் போட்டி நடைபெற்றது. இதில் மாவட்ட கழகச் செயலாளர் முன்னாள் அமைச்சர் தா.மோ. அன்பரசன், மாவட்ட துணைச் செயலாளர் இ. கருணாநிதி ஆகியோர் கலந்துகொண்டு கிரிக்கெட் போட்டியை துவக்கி வைத்து போட்டியில் வெற்றி பெற்ற அணி வீரர்களுக்கு கலைஞர் கோப்பையும் பரிசுத்தொகை 30 ஆயிரம் 20 ஆயிரம் 10 ஆயிரம் 10 ஆயிரமும் என வழங்கினர். உடன் தொ.மு.ச. இரா. பொன்ராம், ஒன்றியக் கழக நிர்வாகிகள் ராஜா, செல்வராஜ், ஊராட்சித் தலைவர் வனஜா தயாளன், துணைத் தலைவர் ஜோசப், ஊராட்சி மன்ற உறுப்பினர்கள், ஊராட்சி நிர்வாகிகள் ஆகியோர் உடன் இருந்தனர்.

### ஏ.வந்தே மாதரம் தலைமை! கொளப்பாக்கம் கிளைக் கழக அவைத் தலைவர்

# டி.மோகன் - எம்.பத்மாவதி இல்ல மணவிழா வரவேற்பு!

### டி.ஆர்.பாலு – தா.மோ.அன்பரசன் – மா.சுப்பிரமணியன் – சா.மு.நாசர் – செஞ்சி மஸ்தான் வாழ்த்து!

காஞ்சிபுரம், ஜூலை.6-

கொளப்பாக்கம் கிளைக் கழக அவைத் தலைவர் டி.மோகன்-எம்.பத்மாவதி ஆகியோரின் புதல்வி எம். காவியாவிற்கும், மாடம் பாக்கம் கே.துளசிதரன் (எ) பாபு - டி.ஜெயந்தி ஆகியோ ரின் புதல்வர் பி.டி.விக் னேஷ்க்கும் மணவிழா நேற்று (5.7.2026 - ஞாயிறு) காலை 7.30 மணியளவில் ஊத்துக்காடு எல்லையம் மன் ஆலயத்தில் நடை பெற்றது.

இம்மணவிழாவரவேற்பு இன்று (6.7.2026 - திங்கள்கிழமை) மாலை 6 மணியளவில்சிக்கராயபுரம் குன்றத்தூர் மெயின் ரோடு முத்துகுமரன்மருத்துவக்கல் லூரி அருகில் அமைந்துள்ள கார்த்திக்பேலஸ் மஹாலில் நடைபெறுகிறது.

இம்மணவிழா வரவேற்பிற்கு குன்றத்தூர் வடக்குஒன்றியசெயலாளர் ஏ.வந்தேமாதரம் தலைமை வகிக்கிறார்.

எஸ்.கே.துளசிங்கம், முனு ஆதித்தன், கே.எம். ராஜா, ஆர்.துரைபாபு, எச். அப்துல்ஜபார், கே.ஆர்.சந்தி ரசேகர், எஸ்.நெடுஞ்செழி யன், எஸ்.இளம்மாறன், ஸ்ரீராம் நாத், துரை.கார்த் திக், கே.சி.முரளிகுமார், ஜெ.சண்முகம், அப்துல்லா, எஸ்.ராஜன் ஆகியோர் வர வேற்கின்றனர்.

துரை.சே.பாலா, எல். மகேஷ்வரி, எம்.நவின் ராஜ், கே.கோகுல்குமார், கோவி.வி.சேகரன், ஆர். சுதாராஜா, சிவ.கார்த்திக், டி.திவாகர், ஆர்.உமாம கேஷ்வரி, எம்.சித்ரா, டி.விஜயலட்சுமி, ஜி. கார்த் திக், வின்சென்ட், டி.சதீஷ், எல்.கே. துளசிங்கம், முனு ஆதித்யன், ஆர்.தீபக் ஆகி யோர் முன்னிலை வகிக் கின்றனர்.

இம்மணவிழா வரவேற்பில்காஞ்சிவடக்கு மாவட்ட கழக செயலாளர் - முன்னாள் அமைச்சர் தா.மோ.அன்பரசன், கழக பொருளாளர்-மக்களவைக் கழகக்குழுத்தலைவர்டி.ஆர். பாலு, மாவட்டக்கழகசெய லாளர்கள் - முன்னாள் அமைச்சர்கள் மா.சுப்பிர மணியம்,ஆவடி.சா.மு.நாசர், செஞ்சி மஸ்தான், இணை அமைப்புச்செயலாளர்அன் பகம் கலை, பூச்சி முருகன், படப்பை ஆ.மனோகரன், அ.தமிழ்மாறன், காரம்பாக் கம் க.கணபதி, ஐ.சி.எஃப். துரைராஜ், இறையன்பன் குத்தூஸ், ஜி.காமராஜர், கோல்டு பிரகாஷ் சரஸ்வதி மனோகரன், உமாமகேஸ்வரிவந்தேமாத ரம், இ.மணி, கே.எத்திராஜ், பட்டூர் எஸ்.ஜபருல்லா, கோ.சத்தியமூர்த்தி, கே.கே. நகர் தனசேகர், நுங்கை வி.எஸ்.ராஜ், இரா.பாஸ்க ரன், ஆர்.டி.பூபாலன், கீதா ஆனந்த், என்.சந்திரன், பால வாக்கம் விசுவநாதன், எஸ். நித்தியா சுகுமார், த.ஜெயக் குமார், ஜெ.சண்முகம், எல். இதயவர்மன், வே. கருணா நிதி, டி.பாபு, எம்.கே.டி. கார்த்திக், பா.குனாலன், மா.பா.அன்புதுரை, இரா. ஏழுமலை, எ.கே.வி. வினோத் உள்ளிட்டோர் பங்கேற்று வாழ்த்து கின்றனர்.

மா.அன்பு, ஜி.சுதாகர், எஸ்.எஸ்.உசேன்,ஏ.விக்னேஷ் குட்டி, ஏ.எம்.சதீஷ் குமார், எம்.அருண் குமார் ஆகி யோர் நன்றி கூறுகின்றனர்.

### ஆலந்தூரில் பாலியல் புகாரில் கைதான

# த.வெ.க. நிர்வாகி அரசு நிகழ்ச்சியில் பங்கேற்பு!

சென்னை, ஜூலை 6-

ஆலந்தூரில் நடந்த மக்கள் குறை தீர்க்கும் முகா மில் ஹரிஷ் எம்எல்ஏ மனுக் கள் பெற்றார். அப்போது, பாலியல் புகாரில் சிக்கி, தவெக பொறுப்பிலிருந்து நீக்கப் பட்ட நிர்வாகியும் அரசு நிகழ்ச்சியில் பங்கேற்ற தால் சலசலப்பு ஏற்பட்டது. சென்னை மாநக ராட்சி, ஆலந்தூர் 12வது மண்ட லத்திற்குட்பட்ட பொது மக்களுக்கான குறை தீர் முகாம், ஆலந்தூர் புது தெருவில் உள்ள முதல்வர் திருமண மண்டபத்தில் நேற்று நடந்தது. ஆலந்தூர் மண்டல உதவி கமிஷனர் முருகதாஸ் தலைமை வகித் தார். செயற்பொறியாளர் மணிமொழி, உதவி வரு வாய் அலுவலர் கண்ணன் முன்னிலை வகித்தனர்.

இந்த முகாமில், ஆலந் தூர் சட்டமன்ற உறுப்பி னர் எம்.ஹரிஷ் கலந்து கொண்டு பொதுமக்களின் குறைகளை மனுக்களாக பெற்றார். இதில் புதிய ரேஷன் கார்டு, பட்டா மாற்றம் கேட்டும், கூடுதல் வரி உயர்வை குறைக்க கோரியும், பழவந்தாங்க லில் குளம் ஆக்கிரமிப்பு, எம்.கே.சாலை நடை பாதை ஆக்கிரமிப்புகளை அகற்ற கோருவது உள் ளிட்ட 200க்கும் மேற்பட்ட மனுக்களை பொதுமக்கள் கொடுத்தனர்.

அப்போது அண்மை யில் பாலியல் புகாரில் கைது செய்யப்பட்டு ஜாமீ னில் வெளிவந்த வேம்புலி என்பவரும் உடனிருந்தார். பாலியல் புகாரால் கட்சி பொறுப்பிலிருந்து நீக்கப் பட்டவர் எப்படி அரசு நிகழ்ச்சியில் பங்கேற்கலாம் என கேட்டு த.வெ.க.வினரி டையே சலசலப்பு ஏற்பட் டது. மேலும் இந்த குறைதீர் நிகழ்ச்சிக்கு உள்ளாட்சி அமைப்பை சேர்ந்த ஆலந் தூர் மண்டல குழு தலை வர், மாமன்ற உறுப்பினர் கள், யாருக்கும் அழைப்பு விடுக்கப்படவில்லை என கூறப்படுகிறது.

### விபி–ஜி ராம்–ஜி திட்டத்தில் புதுச்சேரியில் 125 நாட்களுக்கு வேலை!

# முதல்வர் ரங்கசாமி பேச்சுக்கு தி.மு.க. கண்டனம்!

### புதுச்சேரி மாநில கழக அமைப்பாளர் இரா.சிவா அறிக்கை!



புதுவை, ஜூலை. 6-

விபி-ஜி ராம்-ஜி திட்டத் தில் இனி 125 நாட்கள் கட் டாயமாக வேலை வழங் கப்படும் என்று முதல்வர் ரங்கசாமி தெரிவித்துள்ள கருத்துக்கு திமுக அமைப் பாளர் இரா. சிவா கண்ட னம் தெரிவித்துள்ளார்.

இது தொடர்பாக அவர் வெளியிட்டுள்ள செய்தி அறிக்கையில் கூறியிருப்ப தாவது: -

100 நாள் வேலை என்ற மகாத்மா காந்தி ஊரக வேலை உறுயளிப்புத் திட் டத்தை 125 நாட்களாக உயர்த்திய VBG RAMG (விகாஸ் பாரத் கிராம வேலைவாய்ப்புத் திட்டம்) என்று புதுப்பெயர் மாற் றம் பெற்ற திட்டத்தை நமது மாண்புமிகு புதுச்சேரி முதல்வர் ரங்க சாமி அவர்கள் வில்லி யனூ ரில் துவக்கி வைத்துள்ளார். அதில் பேசும்போது இனி 125 நாட்கள் வேலை கிடைக்கும் என்றும் நாள் கூலியாக ரூ. 347 வழங்கப் படும் என்றும் இதற்காக ஒன்றிய அரசு ரூ. 40 கோடி ரூபாய் ஒதுக்கி உள்ளதில் ரூ. 14 கோடி மாநில நிதி என்றும் கூறியுள்ளார்.

கடந்த 5 ஆண்டில் இவ ரது ஆட்சியில் எந்த ஆண் டும் 100 நாள் வேலை முழு மையாக வழங்கப்பட வில்லை. சராசரியாக ஆண் டுக்கு 15 நாட்கள் கூட வேலை நடைபெற வில்லை. மொத்த செலவில் 100 சதவீதம் ஒன்றிய அரசு நிதி கொடுத்த பொழுதே 100 நாட்கள் வேலை தராத வர்கள் இன்று 40 சதவீத தொகையை மாநில அரசு ஏற்கும் நிலையில் எப்படி இவர்களால் 125 நாட்கள் வேலைதர இயலும். இவர் ஆட்சி காலத்தில் மட்டு மின்றி திரு. நாராயணசாமி அவர்களின் கடந்த காங்கி ரஸ் ஆட்சியின் ஐந்தாண்டு காலத்திலும் இதே அவலம் தான் தொடர்ந்தது.

இத்திட்டத்தில் மாநிலத் தின் நான்கு பிராந்தி யங் களை சேர்ந்த மொத்த வேலை அட்டைதாரர்கள் 75,400 பயனாளிகள் ஆவர். இவர்களுக்கு தலா 125 நாட்களுக்கு ரூ 347 கூலி யில் வேலை தர வேண்டும் என்றால் ஆண்டுக்கு ரூ. 327 கோடி தேவைப்படுகி றது. ஆனால் இவர்களின் ஒதுக்கீடோ மொத்தம் ரூ. 40 கோடிதான். அப்படி இருக்க இந்த தொகையில் 125 நாட்கள் வேலை தரு வது எப்படி சாத்தியமா கும். வழக்கம்போல் ஆண் டுக்கு 15 நாட்கள் கூட இவர்களால் வேலை தர முடியாது. இதை முழுமை யாக உணர்ந்திருக்கின்ற முதல்வர் ரங்கசாமி அவர் கள் 125 நாட்களுக்கு வேலை தருவோம் என்று பேசுவது மக்களை ஏமாற் றுவதாகும்.

ஆகவே, அறிவிப்பு செய் துள்ள 125 நாட்களில் பாதி நாட்களுக்காவது வேலை தரும் விதத்தில் ஒன்றிய அரசை வலியுறுத்தி அதிக நிதியை பெற்று வர முதல் வர் நடவடிக்கை எடுக்க வேண்டும். தொகுதி வாரி யான சட்டமன்ற உறுப்பி னர்கள் தங்கள் தொகுதி மக்களின் தேவையை பூர்த்தி செய்யும் விதத்தில் இத்திட்டத்திற்கு அதிக நிதியை பெற்றுவர முதல் வரை வலியுறுத்த வேண் டும் என்றும் கேட்டுக் கொள்கிறேன்.

# கோவையில் எடை அதிகமாக ஏற்றி வரும் லாரிகள் மீது புகார் அளிப்போம்!

### செங்கல் லாரி உரிமையாளர்கள் சங்கத்தினர் தகவல்!

கோவை, ஜூலை. 6-

அரசு நிர்ணயித்த எடை யில் மட்டுமே இனி லாரிகளை இயக்க வேண்டும், எடை அதி கமாக ஏற்றி வரும் லாரிகள் மீது நடவடிக்கை எடுக்க கோரி நாங்களே புகார் மனு அளித்து வலியுறுத்துவோம் என்று கோவை மாவட்ட செங்கல் லாரி உரிமையாளர் கள் சங்கத்தினர் தெரிவித்துள் ளனர்.

கோவை மாவட்டத்தில் தடாகம், சின்னதடாகம், வீர பாண்டி, சோமையம்பாளை யம் உள்ளிட்ட பகுதிகளில் தான் 100க்கணக்கான செங் கல் சூளைகள் செயல்பட்டு வருகின்றன. இந்த சூழலில் தடாகம் பகுதியில் இயங்கும், கோவை மாவட்ட செங்கல் லாரி உரிமையாளர்கள் சங்கத் தினர் செய்தியாளர்களை சந் தித்தனர்.

அப்பொழுது சங்க நிர்வா கிகள், பரசுராமன், செந்தில் குமார், தமிழரசன், தினேஷ் குமார் ஆகியோர் கூட்டாக கூறுகையில், "கோவை மாவட்ட செங்கல் லாரி உரி மையாளர்கள் சங்கத்தின் சார் பாக, 4, 5 மற்றும் 6ம் தேதி என மூன்று நாட்கள் அடை யாள வேலை நிறுத்த போராட்டத்தை நடத்த உள் ளதாகவும், இதில் சுமார் 300க்கும் மேற்பட்ட லாரிகள், கோவை மாவட்டத்தில் மட் டும் வேலை நிறுத்தம் செய்ய உள்ளதாகவும், இதனால் ஒரு நாளைக்கு 18 லட்சம் இழப்பு ஏற்படும் என்ற நிலை உள் ளது.

மேலும் இந்த தொழிலை நம்பி, உள்ள சுமார் 3000த்திற் கும் மேற்பட்ட தொழிலாளர் களின் வாழ்க்கை பாதிக்கும் நிலை உள்ளது. இந்த போராட்டம் நடத்த முக்கிய காரணம் அதிக எடையுடன் செங்கல்கள் ஏற்றி வரும் லாரி களுக்கு அதிக அளவில் காவல் துறையினர் அபராதம் விதிக் கின்றனர். ஆர் டி ஒ அதிகாரிகள் லாரிகளை சிறை பிடிக்கின்றனர். இதனால் லாரி உரிமையாளர்கள் கடு மையாக பாதிக்கப்படுகின்ற னர்.

இதனால் அரசு நிர்ணயித்த எடையின் அளவில் லாரி களை இயக்க உள்ளனர். ஜிஎஸ்டி பில் இல்லாமல் செங் கல்களை விற்பனை செய்யும் நிறு வனங்களில் இருந்து செங் கல்களை வாங்க மாட்டோம். வேலை நிறுத்த நாட்களில் செங்கல்கள் உற்பத்தியாகி றது. சேலம், பழநி, தாராபுரம், தூத்துக்குடி, உள்ளிட்ட பகுதி களில் வெளிமாவட்ட லாரி கள் வருகின்றன. எங்களது போராட்ட நாட்களில், லாரி கள் வந்தால் அதனை சிறைப் பிடித்து காவல்துறையினரி டம் ஒப்படைக்க உள்ளோம் என்றனர். எங்களது சங்கத் தின் இந்த கோரிக்கையை ஏற்று, பல்வேறு மாவட்ட லாரி உரிமையாளர்கள் ஒத்து ழைப்பு வழங்கி உள்ளதாக வும் தெரிவித்தனர்.

மேலும், வெளி மாவட் டங்களில் உள்ள சேம்பர் உற் பத்தியாளர்கள், செங்கல் விலையை குறைக்க வேண் டும்.. அதிக விலைக்கு செங்கல் களை விற்பனை செய்வதால் கட்டுமான தொழில் பல்வேறு பாதிப்புகளுக்கு உள்ளாகிறது. டீசல் விலை உயர்வு, உதிரி பாகங்கள் விலை உயர்வு, சாலை வரி உயர்வு, உள் ளிட்ட பல்வேறு இடையூறு களை சந்தித்து வருவதால், இத்தகைய போராட்டத்தை நடத்த உள்ளோம்"

இவ்வாறு கூறினார்கள்.

# பெரம்பூரில் அரசு வேலை வாங்கித் தருவதாக ரூ.86 லட்சம் மோசடி!

சென்னை, ஜூலை 6-

அரசு வேலை வாங்கித் தருவதாகவும், குடிசை மாற்று வாரி யத்தில் வீடு வாங்கித் தருவ தாகவும் கூறி ரூ.86 லட்சம், 24 சவ ரன் வாங்கி ஏமாற் றிய நபர் மீது போலீசார் வழக்கு பதிந்து விசாரணை நடத்தி வருகின்றனர்.

வியாசர்பாடி சுந்தரம் தெரு பகுதியைச் சேர்ந்த வர் கீதா பரணி (56). இவ ருக்கு திருமணமாகி ஒரு மகன், ஒரு மகள் உள்ள னர். இவரது கணவர் கடந்த 2010ம் ஆண்டு உடல்நிலை சரியில்லாமல் இறந்து விட்டார். கீதா பரணி துணி வியாபாரம் செய்து வரு கிறார். இவரது மாமன் மகனான வெங்கட் ராமன் வெங்கட்ராமனி டம் என்பவர் கடந்த 2023ம் ஆண்டு உறவினர் திரும ணத்தில் பழக்கமாகி அவரு டன் பேச்சு வார்த் தையில் இருந்துள்ளார்.

மேலும் அவர் ரியல் எஸ் டேட் தொழில் செய்து வருவதாகவும், தலைமைச் செயலகம் மற்றும் தமிழ் நாடு குடிசை மாற்று வாரி யத்தில் தனக்கு ஆட்கள் தெரியும் என்று கூறி கீதா பரணியிடம், யாருக்காவது வேலை வேண்டும் அல்லது வீடு வேண்டும் என்றால் சொல்லுங்கள் என தெரி வித்துள்ளார்.

அதன் அடிப்படையில் கீதா பரணி தனக்கு தெரிந்த நபர்களிடம் அரசு வேலை வாங்கித் தருவதற் காகவும், குடிசை மாற்று வாரியத் தில் வீடு வாங் கித் தருவதற் காகவும் 86 லட்சம் ரூபாய் பணத்தை கொடுத்துள் ளார். ஆனால் அரசு வேலையும், வீடும் வாங்கி தராமல் ஏமாற்றி வந்துள் ளார். மேலும் கீதா பரணி வைத்திருந்த 24 சவரன் தங்க நகைகளையும் வெங் கட்ராமன் வாங்கிக் கொண்டு இதுவரை தர வில்லை எனக் கூறப்படு கிறது.

இதனால் கீதா பரணி பத்தாவது பெருநகர குற்ற வியல் நீதி மன்றத்தில் மனு தாக்கல் செய்திருந்தார். அதன் படி வெங்கட்ராமன் மீது வழக்கு பதிவு செய்யும் படி நீதிமன்றம் அறிவுறுத் தியது. இதனையடுத்து வியாசர் பாடி போலீசார் வெங்கட் ராமன் மீது வழக்கு பதிவு செய்து விசா ரணை நடத்தி வருகின் றனர்.

### அயோத்தி ராமர் கோயிலைத் தொடர்ந்து

# பத்ரிநாத் கோயிலிலும் காணிக்கை திருட்டு புகார்!

புதுடெல்லி,ஜூலை,6–

அயோத்தி ராமர் கோயிலை தொடர்ந்து, பத்ரிநாத் கோயிலி லும் காணிக்கை திருடப்பட்ட தாக புகார் எழுந்துள்ளது.

உத்தராகண்ட் மாநிலத்தின் 4 முக்கியப் புனிதத் தலங்களில் ஒன்றான பத்ரிநாத்தில் உள்ள விஷ்ணு கோயில் உள்ளது. கடந்த 2025ல் 51 லட்சத்துக்கும் அதிகமான பக்தர்கள் இக்கோயி லுக்கு வருகை தந்துள்ளனர். இந் தக் கோயிலை பத்ரிநாத்கேதார் நாத் கோயில் கமிட்டி (பிகேடிசி) நிர்வகித்து வருகிறது. இந்நிலை யில் பிகேடிசி தலைவரின் தனிப் பட்ட செயலாளர் மீது பைரவ் சேனா எனும் ஆன்மிக அமைப்பு தீவிர குற்றச்சாட்டுகளை முன் வைத் துள்ளது.

இது தொடர்பாக விசாரணை கோரி பிகேடிசியின் தலைமை நிர்வாக அதிகாரி சோஹன் ரங் கத்திடம் பைரவ் சேனாவின் நிறு வனத் தலைவர் சந்தீப் கத்ரி மனு அளித்துள்ளார்.

அந்த மனுவில் பத்ரிநாத் கோயில் காணிக்கையில் முறை கேடுகள் மற்றும் நிதி கையாடல் நடந்துள்ளதாகவும் எனவே சம்பந் தப்பட்ட ஊழியரின் பங்கு குறித்து விசாரணை நடத்தப்பட வேண் டும் என்றும் அவர் கோரியுள்ளார்.

இதுகுறித்து பிகேடிசி தலை வர் ஹேமந்த் திவேதி கூறுகை யில், "சமூக ஊடகங்களில் குறிப் பிடப்படும் நபர் உண்மையில் எனது தனிப்பட்ட செயலாளர் அல்ல. அவர் பத்ரிநாத்கேதார் நாத் கோயில் கமிட்டியின் ஒரு சாதாரண அரசு ஊழியர். இதற்கு முன்பு அவர் மூன்று கோயில் கமிட்டித் தலைவர்களிடம் தனிப் பட்ட உதவியாளராகப் பணியாற் றியுள்ளார். இவர் மீதான குற்றச் சாட்டுகள் உண்மையானவை எனத் தெரிந்தால் அவர் மீது கடு மையான நடவடிக்கை எடுக்கப் படும்.

இந்த விசாரணைக்காக ஒரு குழுவை அமைக்கவும் கோவில் நிர்வாகம் உத்தரவிட்டுள்ளது. அப் புகாரின் அடிப்படையில், பத்ரி நாத் கோயில் வளாகம் மற்றும் அதனைச் சுற்றியுள்ள பகுதிக ளில் உள்ள சிசிடிவி கேமராக்க ளின் காட்சிகளும் ஆய்வு செய் யப்பட்டு வருகின்றன என்றார்.

இந்த விவகாரத்தில் பத்ரிநாத் கேதார்நாத் கோயில் ஊழியர்கள் கூட்டமைப்பும் சில முன்னெடுப்பு களை மேற்கொண்டுள்ளது. இச் சம்பவம் குறித்து வெளிப்படை யாக விசாரணை நடத்தப்பட வேண்டும் என்று சங்கத்தின் தலைவர் விஜேந்திர பிஷ்ட், கோயில் குழுவுக்கு கடிதம் அனுப் பியுள்ளார்.

### முத்துப்பேட்டை ஒன்றியம்

# மாங்குடி கீனா (எனும்) கிருஷ்ணமூர்த்தி மறைவு!

திருவாரூர், ஜூலை. 6-

திருவாரூர் மாவட்டம் முத்துப்பேட்டை ஒன்றி யம், மாங்குடி ஊராட்சி யைச்சேர்ந்த திராவிட முன்னேற்றக்கழகத்தின் மூத்த முன்னோடியும், "கீனா" என்று அனைவரா லும் அன்புடன் அழைக்கப் பட்ட மாங்குடி, ஆர். கிருஷ்ணமூர்த்தி அவர்கள் இயற்கை எய்தினார் என் பதை ஆழ்ந்த வருத்தத்து டன் தெரிவித்துக்கொள்கி றோம்.

மறைந்த கிருஷ்ண மூர்த்தி அவர்கள் கழகத் தின் ஆரம்ப கால உறுப்பி னர் ஆவார். தலைவர் கலைஞர் அவர்கள் மீதும், திராவிடநாயகர் தளபதி அவர்கள் மீதும் மாறாப்

**கழகத்தினர் அஞ்சலி!**



பற்றுகொண்டிருந்த இவர், வட்டக்கழகம் ,கிளைக் கழகம் என கழகத்தின் பல் வேறு பொறுப்புகளில் தொடர்ந்து இருந்து கழகப் பணி ஆற்றியவராவார். குறிப்பாக தேர்தல் பணிக ளின் முனைப்போடு ஈடு படும் கிருஷ்ணமூர்த்தி அவர்கள் அனைவரிடத்தி லும் அன்போடு பழகுப வர். இவருக்கு கோப்பருந் தேவி, தமிழரசி என்கிற மகள்கள் உள்ளனர்.

மறைந்த கிருஷ்ண மூர்த்தி அவர்களின் இறுதி ஊர்வலம் 5.07.2026 ஞாயிறு அன்று மாங்குடி அவரது இல்லத்தில் இருந்து புறப்பட்டது. அன்னாரின் மறைவின் தகவல் அறிந்த மாவட்டக் கழக செயலா ளர் பூண்டி.கே.கலைவா ணன் எம்.எல்.ஏ. , ஒன்றி யச் செயலாளர் இரா. மனோகரன் உள்ளிட்ட கழக நிர்வாகிகளும், கழக தோழர்களும் அவரது குடும்பத்தினருக்கு ஆறுதல் கூறினர்.

## திராவிட இயக்க தீரர்கள் நினைவு நாள்

### கே.கே. பலராமன்

**ஜூலை 6 (2015)**



திருவண்ணாமலை மாவட்டம், செய்யாறு ஒன்றியச் செயலாளராக நான்கு முறையும், பொதுக்குழு உறுப்பினராகவும், மாவட்டப் பொருளாளராகவும், மாவட்ட நெசவாளர் அணி அமைப்பாளராகவும் பொறுப்பேற்று கழகப் பணியாற்றியவர்.

கொருக்காத்தூர் ஊராட்சி மன்றத் தலைவராக நான்கு முறையும், செய்யாறு ஒன்றிய துணைத் தலைவராகவும், மாவட்ட ஊராட்சிக்குழு உறுப்பினராகவும், ஒன்றியக்குழு உறுப்பிரானகவும் பொறுப்பு வகித்து அப்பகுதி மக்களின் நன்மதிப்பை பெற்றவர்.

கழகம் அறிவித்த அனைத்துப் போராட்டங்களிலும் கலந்து கொண்டு சிறை சென்றவர்.

**தலைமைக் கழகம்**
**தி.மு.க.**